மே.கு.ந.க.எண்.13308/2023/பதொ4

கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர்
அலுவலகம், கீழ்ப்பாக்கம்,
சென்னை–10.

நாள்.11.10.2023.

அரசாணை (3ப) எண்.6, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் (சிஎச்2) துறை, நாள்.29.09.2023 திரு.உ.கிரண்குமார், இளநிலை உதவியாளருக்கு தொடர்புறுத்தப்படுகிறது.

/ஆணைப்படி/

கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளருக்காக

பெறுநர்

1. திரு.உ.கிரண்குமார், இளநிலை உதவியாளர்.
   – பொது விநியோகத் திட்டம்–2 மண்டல இணைப்பதிவாளர் மூலமாக.

2. கூட்டுறவுச் சங்கங்களின் இணைப்பதிவாளர்,
   பொது விநியோகத் திட்டம் –2,
   சென்னை.

நகல்:–
முக்கிய ஆணைத்தொகுப்பு – 2023.

## சுருக்கம்

பணியமைப்பு – தமிழ்நாடு அமைச்சுப் பணி – கூட்டுறவுத் துறை – கருணை அடிப்படையிலான பணி நியமனம் – காலஞ்சென்ற அரசு ஊழியர் அமரர் வி.உதயகுமார், கூட்டுறவு சார்பதிவாளரின் மகன் திரு.உ.கிரண்குமார் இளநிலை உதவியாளராக பணி நியமனம் செய்யப்பட்டது – பணிவரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் (சிஎச்2) துறை**

அரசாணை 3(ப) எண்.6

நாள்:29.09.2023
சோபகிருது வருடம்
புரட்டாசித் திங்கள் – 12–ஆம் நாள்
திருவள்ளுவர் ஆண்டு – 2054

படிக்கப்பட்டது

1. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, நாள் 01.08.2018.
2. கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் அவர்களின் கடிதம் ந.க.எண்.13308/2023/பதொ4, நாள் 25.07.2023.

--------

**ஆணை:**

மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் அவர்களின் கடிதத்தில், இணைப்பதிவாளர் (பொது விநியோகத் திட்டம் –2) சென்னை அலுவலகத்தில் பணியில் இருக்கும் போது 08.03.2015 அன்று காலமான அரசு ஊழியர் வி.உதயகுமார் என்ற கூட்டுறவு சார்பதிவாளரின் மகன் திரு.உ.கிரண்குமார் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக, பணிநியமனம் செய்யப்பட ஏதுவாக இணைப்பதிவாளர் (பொது விநியோகத் திட்டம் –2) சென்னை மண்டலத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டார் என்றும், இதன் தொடர்ச்சியாக, திரு.உ.கிரண்குமார், துணைப்பதிவாளர் (பொது விநியோகத் திட்டம்) புறநகர் சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.113/2023/அபஅ, நாள். 03.02.2023–இன் வழி பணிநியமன ஆணை வழங்கப்பட்டு, துணைப்பதிவாளர் (பொது விநியோகத் திட்டம்) புறநகர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக 03.02.2023 பிற்பகல் பணியில் சேர்ந்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

2. கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்பட்டு பணியாற்றி வரும் திரு.உ.கிரண்குமார் இளநிலை உதவியாளரின் கருணை அடிப்படையிலான பணி நியமனத்தை அவர் பணியில் சேர்ந்த நாளான 03.02.2023 பிற்பகல் முதல் வரன்முறை செய்து தக்க ஆணை வழங்குமாறு கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் அரசைக் கோரியுள்ளார்.

3. மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்ட பணியாளர்களின் பணியினை வரன்முறை செய்வதற்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் இசைவினைப் பெறும் நடைமுறை கைவிடப்படுவதாக ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

4. இந்நிலையில், மேலே பத்தி 2-இல் உள்ள கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் அவர்களின் கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்தது. ஆய்வுக்குப்பின், திரு.உ.கிரண்குமார் என்பவருக்கு தமிழ்நாடு அமைச்சுப் பணியில், கூட்டுறவு துறையில் துணைப்பதிவாளர் (பொது விநியோகத் திட்டம்) புறநகர், சென்னை அலுவலகத்தில், கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பதவியில் பணிநியமனம் செய்யப்பட்ட நாளான 03.02.2023 பிற்பகல் முதல் அவர் அப்பணியிடத்திற்குத் தேவையான உடல் தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் பணிவரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு முன் தேதியிட்டு பணிவரன்முறை செய்யப்படுவதால், அவர் ஆண்டு ஊதிய உயர்வுகள் மற்றும் ஊதிய நிலுவை ஏதுமிருப்பின் அவற்றைப் பெற அரசு விதிகளின்படி தகுதியுடையராகிறார்.

5. தனியரின் பணிப்பதிவேட்டில் பணிவரன்முறைப் படுத்தப்பட்ட விவரத்தைப் பதிவு செய்ய, தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் அறிவுறுத்தப்படுகிறார்.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**டி.ஜகந்நாதன்**
**அரசு செயலாளர்.**

பெறுநர்
கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர், சென்னை – 10.
திரு.உ.கிரண்குமார், இளநிலை உதவியாளர்,
(வழி: கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர், சென்னை –10)

/3../

முதன்மை மாநிலக் கணக்காயர், சென்னை – 18.
மாநிலக் கணக்காயர் (தணிக்கை), சென்னை – 18.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலகம்,(வடக்கு), சென்னை–1.
மண்டல இணைப்பதிவாளர்; சென்னை.

<u>நகல்</u>
மனித வள மேலாண்மைத் துறை, சென்னை –9.
இருப்பு கோப்பு / உதிரி நகல்.

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

சி. சுந்தர்

அரசு சார்புச் செயலாளர்
கூட்டுறவு, உணவு மற்றும்
நுகர்வோர் பாதுகாப்புத் துறை
தலைமைச் செயலகம், சென்னை

5/4/23

3/3